# FATHWA

(MEMORANDUM)

## ULAMA'S CONFERENCE

OF

15th SEPTEMBER 1951

AT

KALMUNAI.

●

TRANSLATED BY THE

ULAMA ASSOCIATION
[OF EASTERN REGION]

●

ASSISTED BY
ALHADJ SHEIKH HAMZA ALIM
NALEEM HAJIYAR J. P.
&
ALAWI MOULANA.

ஸுன்னத் ஜமா அத் உலமாக்களை ஒன்று படுத்தி குருன், ஹதீஸ் இஜ்மாஃ கியாஸ் இவற்றின் அடிப்படையில் வேலைத் திட்டத்தை அமைத்து ஈமான் இஸ்லாம் இபாதாத் முறைகளில் அங்கீகரிக்கப்பட்ட மத்ஹபுகளைப் பின்பற்றி நடக்க மக்களை ஐக்கியப்படுத்தல். இது சம்பந்தமான பொதுக்கூட்டம் ஒன்றை எதிர் வரும் ஹஜ்ஜுப் பிறை 13 அஷர்த் தொழுகைக் குப்பின் கூட்ட உத்தேசித்துள்ளோம். விபரங்கட்கு கௌரவ காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

N. B. இப்பிரசுரங்களைக் கூடிய கெதியில் அரபியிலும் ஆங்கிலத்திலும் வெளியிடவிருக்கிறோம் இன்ஷா அல்லாஹு

இராஜேஸ்வரி அச்சகம், 18, குமார வீதி, கொழும்பு 11

# முன்னுரை

பல்வகைப் புகழும் அல்லாஹு சுப்ஹான குத்த ஆலாவுக்கே உரியது; சலவாத்தும் சலாமும் றஹமதுன்லில் ஆல மீனுன றசூலே கரீம் (ஸல்) அவர்கள்மீதும், ஆல் அஷ்ஹாப் முதல் சுன்னத்வல் ஜமாஅத் முஸ்லிம்கள் சகலர் மீதும் உண்டாவதாக!

## சுன்னத் ஜமா அத்முஸ்லீம்

சகோதர சகோதரிகளே!

இறையருளால் இற்றைக்கு 15 வடங்களுக்கு முன் கல்முனை யில் நடைபெற்ற மார்க்க மகா நாட்டின் பத்வாமார்க்கத் தீர்ப்பை 2ம் பதிப்புச் செய்வது முக்கியம் எனக்கருதுகிறோம்.

மார்க்க முரண்பாடான கொள்கைகளை மக்கள் மத்தியில் வேரூன்றச் செய்யும் வஹ்ஹாபியக் கூட்டம், தங்கள் கொள் கையே சரியென எண்ணி நடந்து வருவதாலும், 54, உலமாக்க ளின் மார்க்கத்தீர்ப்பை அலட்சியம் செய்து தங்கள் பிடியே சரி யென விதண்டாவாதம் பண்ணி மக்களைத் தவறானவழியில் இட்டுச் செல்வதாதும் 2ம் பதிப்பின் அவசியம் ஏற்பட்டுவிட்டது;

அன்பர்களே!

மூன்றாண்டு காலமாகக் கல்முனைப் பள்ளி வஹ்ஹாபியக்குகை யாக மாறிவிட்டது; சுன்னத் ஜமாஅத் உலமாக்களுக்கு வாய்ப் பூட்டு ஹதீஸ் சொல்ல அனுமதியில்லை; ஐங்காலத் தொழுகை யின் பின் லாஇலாஹ இல்லல்லாஹு 'திக்று' மறைந்து மறைந்து மஃஷர் என்னும் மர்கா மகுடியாகி மத்ஹபுடைய பேரான இமாம் அப்துல் வஹ்ஹாபுஷ்ஷஃறானி அவர்கள் பாடிய துஆ (இலாஹி லஸ்து) அனாதையாகிவிட்டது; றசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மௌலிது புகழ் சகலதும் பரதேசம் போய்விட்டது. சுருங்கக் கூறின் சுன்னத்ஜமா அத் பள்ளி வஹ்ஹாபியப் பள்ளி யாகிய (இல்மு) அறிவுக்குக் கொடுக்கும் இடத்தை நீண்டமசிருக் கும், தலைப்பாக்கட்டுக்கும், அலுகோஸ் அங்கிக்கும் கொடுக்கப் பட்டு விட்டது எனவே 54 உலமாக்களின் பத்வா (அரபு) மொழி பெயர்த்து இந்நூலின் 2ம் பாகம், 1ம் பதிப்பாகப் பிரசுரிக்கி றோம். பெரிதும் மனமுவந்து இந்நூலை வாங்கி உபயோகிக்கும் நல்லார்களுக்கும், இதைக் கண்ணியமுடன் படித்துப் பயன்பெறும் வாசகர்கட்கும் எனது ஆழிய நன்றி.

என்னையும், எனதன்பர்களான உங்களையும் நல்வழி நடக்கச் செய்து புனிதமுற்று வெற்றியடைந்த சுன்னத் ஜமா அத்தான நற் கூட்டத்தில் சேர்த்துவைத்திடும் துறையில் இப்பிரசுரம் நற் சாதனமாய் அமைந்திட எல்லாம் வல்ல றஹ்மான் நல்லருள் பாலிப்பானாக! ஆமீன்.

இவ்வண்ணம்

காதிமுல் இஸ்லாம்

கல்முனை-5.

8—8—66.

இப்ருஹீம் பின் யூசுப் (அல்பஹ் ஜிய்யி)

★

# இருவழிக்கு ஒருவழித் தேர்தல்

## மார்க்க மகாநாட்டின் வரலாறு-

**1951ம்** ஆு புரட்டாசி தி 15-ந் திகதி காலை 9 மணிக்கு கல்முனை முற்றவெளியில் அமைக்கப்பட்ட விவாத மன்றத்தில், கல்முனைத் தொகுதிப் பாராளு மன்றத்தின் பிரதிநிதி இராசவாசல் முதலியார், M. S. காரியப்பர் J. P. U. M. கல்முனைப் பட்டினசபைத் தலைவர் அவர்களின் தலைமையில் மார்க்க விவாத மகாநாடு கூடியது. மௌலானா மௌலவி அல்லாமா, பத்றுல் உலமா முஹம்மதலி மரைக்கார் பின் அஹ்மத் மரைக்கார் ஹாஜில் ஹறமைனிஷ் ஷரீபைன் அவர்கள் நீதிபதியாய் வீற்றிருந்தார்கள். அவர்களின் காரியதரிசியாய் மௌலவி செய்யித் பள்ஹுல்லா மௌலானா அவர்கள் கடமையாற்றினார்கள், மௌலவி A. M. இப்றுஹீம் அவர்களின் கிரு அத்துக்குப் பின் கூட்டம் ஆரம்பமானது.

### அன்ஸா சுன்னத் முஹம்மதிய்யா சார்பில்

பிரபல அர்லாமா தர்வேஸ் பக்குறி

அஹமத் ஆலிம்

நெய்னு முஹம்மது ஆலிம்

A. H. முஹம்மதிஸ்மாயில் ஆலிம்

U. L. M. குத்துஸ் அவர்களும் பெயர் குறிப்பிடாத நான்கு நபர்களும், ஆக 9 பேர் சமுகங்கொடுத்தனர். இவர்களில் தர்வேஸ் ஹாஜியாரும், அஹமத்தும் பேச்சாளர்களாயிருந்தனர்

### நத்வதுல் உலமாக் கமிட்டியார் சார்பில்

| | |
|---|---|
| காத்தான்குடி, | M. முஹம்மதியிபுறுஹீம் ஆலிம் |
| மருதமுனை, | M. M. முகையதீன் ,, |
| கல்முனைக்குடி, | S. M. A. முகம்மதிஸ்மாயில் ,, |
| கல்முனைக்குடி, | P. M. மக்பூல் ,, |
| சாய்ந்தமருதூர், | S. M. K. அப்துல் காதர் மௌலானா |

| | | |
|---|---|---|
| சம்மாந்துறை, | A. M. முஸ்தபா | ஆலிம் |
| நிந்தவூர், | S. L. முகம்மதிஸ்மாயில் | ஆலிம் |
| அட்டாளைச்சேனை, | E. L. முகம்மதிஸ்மாயில் | ஆலிம் |
| அக்கரைப்பற்று, | A. M. புகாரி | ஆலிம் |

ஆகிய 9 பேர்கள் சமுகம் கொடுத்திருந்தனர்.

## விவாத மன்றத்தின்

வலதுபக்கம் நத்வதுல் உலமாக் கமிட்டி சார்பில் தராதரம் பெற்ற 9 உலமாக்களும் இடது கோடியில் அன்ஸார் சுன்னத் சங்க சார்பில் தர்வேஷ் குழாத்தினர்களும் மத்தியில் தலைவர் (மத்யட்ச கர்) நீதிபதி, நீதிபதியின் காரியதரிசி ஆகியோரும் அவரவர்கட்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களிலமர்ந்து விவாதம் நடத்தியமை கண் கொள்ளாக் காட்சியாகவே மிளிர்ந்தது.

நிர்வாகிகளால், விவாத மன்றம் நுழைய அனுமதிச்சீட்டு வழங் கப்பட்டது. விவாத மன்றத்தைச்சுற்றி முட்கம்பி வேலியிடப்பட் டிருந்தது. பொலிஸ் காவலர்கள் சுற்றிக் காவல் புரிந்தனர். 20,000க்கு அதிகமான பொதுமக்கள் வேகா வெயிலையும் கவனியாது கூட்ட நடவடிக்கையைக் கவனித்து நின்றனர், இதுபோன்ற ஒரு மார்க்க மகாநாடு அகில இலங்கையிலுமே இதற்குமுன் நடந்திராது என்று கூறின் அது மிகையாகாது

முற்பகல் கூட்டத்தில் இரு கட்சியாலும் விவாதிக்கப்பட்ட ஆறு காரியங்கட்கும்தர்வேஷ் ஹாஜியார் ஆதாரமாய்க் காட்டியகிரந்தங் களில் 2 மட்டுமே நேர்வழி பெற்ற சுன்னத் வல்ஜமா அத் கூட்டத் தினரால் ஏற்றுக்கொள்ளப் பட்டதென்றும், ஒருகிதாப் வழிதவறிய ஓர் வஹ்ஹாபியால் எழுதப்பட்டதென்றும் கூட்டத்தில் கூறப்பட் டது. வஹ்ஹாபியால் எழுதப்பட்டதென்றதை முற்பகலில் சமுக மளித்திருந்த தர்வேஷியும் ஆட்சேபிக்கவில்லை. நஹ்வு சட்டத்திற்கு (அறபி இலக்கணம்) முற்றும் முரணுக கிதாப் வாசித்த தர்வேஷியா ரின் போலி அல்லாமாட்டமும் இக்கூட்டத்தில் அம்பலமாய்விட்டது.

இலக்கணம்பற்றி இங்கு பிரச்சினையில்லை. விஷயத்தைக் கவ னியுங்கள் என்று நீதிபதியால் கட்டளையிடப்பட்டதும் நத்தவதுல் உலமாக் கமிட்டியார் பிழைபிடிப்பதை நிறுத்திக்கொண்டனர். தர்வேஷியா கிதாப் வாசிக்க வெட்கப்பட்டு தனக்கண்மையிலிருந்து

அஹமதிடம் கிதாபை ஒப்படைத்தார். தர்வேஷ் சார்பில் சமுகமளித்த ஏனைய உலமாக்களிடம் மௌனம் நிலவியது. ஒருவரும் ஒரு விஷயத்தைக் குறித்தும் விவாதிக்க முன்வரவில்லை. U. L. M. குத்தூஸும் பெயர் குறிப்பிடாத நால்வரும் வியாபாரிகளாயிருந்தனர். முகத்தில் தாடிவைத்த இவர்களை உலமாக்கள் என முன்னறிவித்தல் கொடுத்ததும் இக்கபட சுன்னத் சங்கத்தின் திருவிளையாடலில் ஒன்றாகும். தர்வேஷியோ அல்லது அஹ்மதோ எந்த மத்ரசாவிலாவது பூரணமாயிருந்து ஓதி தராதரம் பெற்ற மௌலவி ஆலிம்களல்ல பேருக்குமட்டும் ஆலிம்களாயிருந்தனர்.

நத்வதுல் உலமாக் கமிட்டி சார்பில் சமுகங் கொடுத்தவர்களெல்லாம் மௌலவி தராதரம் பெற்றவர்கள்; அரபு ஆசிரியர்கள்

மேலும் இவர்கள் விவாதித்த ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒன்றன்பின் ஒன்றாக பல கிரந்தங்களிலிருந்தும் மிகுதமான ஆதாரங்களை எடுத்துக்காட்டவும், தலைவரவர்களால் மூன்று ஆதாரங்களுடன் நிறுத்திக்கொள்ளுங்கள், மூன்று ஆதாரம் போதுமானது, விவாதிக்கும் விஷயங்கள் மிகுதமாய் இருப்பதால் போதுமான அளவு சுருக்கிக்கொள்வது உசிதமானது என்று கட்டளையிட்டதின் காரணமாக உலமாக் கமிட்டியார் 3 ஆதாரங்களுடன் (குருன், ஹதீது, பத்வாவுடைய கிதாபுகள்) நிறுத்திக்கொண்டனர்.

தர்வேஷியார் விவாத மன்றம் புகுந்ததும், முதலாவதாக எழுந்து நின்று இம்மார்க்க மகாநாட்டிற்கு தலைமை தாங்கும் தலைவர் தீர்ப்பளிக்கும் (மத்தியட்சம்) நீதிபதி ஆகியோரையும் ஷாபிஈ மத்ஹபுடைய பத்வாவுக்குரிய ஆதார நூல்களையும், மனப்பூர்வமாய் அங்கீகரிப்பதாக உறுதிகூறி ஆசனத்திலமர்ந்தார்கள். இதன்பின் தலைவரால் தலைமையுரை கூறப்பட்டு விவாதம் ஆரம்பமானது:

# தலைவர் முன்னுரையின் சாராம்சம்

சபையோர்கட்கு வந்தனம் தெரிவித்த பின் தொடர்ந்து கூறியதாவது; இம்மாபெரும் ஜனத்திரள் கூடிய இம்மார்க்க மகாநாட்டிற்கு என்னைத் தலைமை தாங்குமாறு ஏற்பாடு செய்த செயலாளர்கட்கு என் நன்றி மத்தியட்சமாய் வந்திருக்கும் நீதிபதியவர்களே! விஷயங்களை விவாதிக்கும் உலமாக்களே! அறிஞர்களே! இக்கூட்ட நடவடிக்கையை ஆர்வத்துடன் கவனித்து நிற்கும் பொது ஜனங்களே! நீங்கள் எல்லோரும் இஸ்லாம் மதத்திற்காக இம்மார்க்க மகாநாட்டின் முடிவைக் கவனிப்பதற்காக உங்களின் வேலை ஜோலிகளையெல்லாம் விட்டுவிட்டு எறிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாதது பல்லாயிரக்கணக்காண மக்கள் இங்கு குழுமியிருப்பது எனக்கு ஓர் புது உற்சாகத்தைக் கொடுக்கிறது.

இவ்விவாதம் உலமாக்களுக்கிடையில் நடைபெறுவதால் இவற்றை ஆரம்பமுதல் இறுதிவரை கவனிக்க வேண்டியது மிக அவசியமாகும் உலமாக்களைக் கௌரவிப்பது நமது கடமை, ஒரு முஸ்லிம் நாளை மறுமையில் இறைவன் சன்னிதியில் உலமாக்கள் சபையிலிருந்தாயா? அவர்கள் வாக்கியங்களைக் கேட்டு உறுதி பெற்றாயா? அவர்களைக் கண்ணியயணியப்படுத்தினாயா? அவர்களுடன் போஜனமருந்தினாயா? அவர்கட்கு ஏதும் உதவிகள் புரிந்தாயா? என்பன போன்ற கேள்விகள் கேட்கப்படுவான் என ஹதீஸ் வாயிலாய் அறிந்திருக்கிறேன்; மேலும், உலமாக்களுடன் உறவாடிய ஒருவரை அடுத்திருந்தாலும் கூட நன்மை கிடைக்கும் என முதியோர்களால் சொல்லக் கேட்டிருக்கிறேன் ஆகவே இன்றைக்கு இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் சமுகம் கொடுத்த உலமாக்கள் சபைக்கு அக்கிராசனர் பதவி கிடைத்தது பெரும் பாக்கியமெனக் கருதுகிறேன்.

மூஸாநபி அவர்களின் காலத்திலிருந்த பிற்ஔன் தன்னைப் பெரிய ஆண்டவன் என வழக்கடித்தான். இவனுக்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வழிபட்டேயிருந்தனர். ஒரு நாள் இபுலீஸ் பிற்ஔனை அடுத்து என்னைவிட நீ பெரிய பாவியப்பா நான் அல்லாவுடைய ஒரு சொல்லுக்கு மட்டுந்தான் வழிபடவில்லை. அதற்காக நான் சபிக்கப்பட்டுப் போனேன் நீயோவெனில், ஆண்டவனுடன் வழக்காடுகிறாய், நீ ஓர் பெரிய ஆண்டவன் என்று இவ்விதம் கூறக்கேட்ட பிற்ஔன் பின் அவன் தன்

தவறை உணர்ந்து தவ்பா செய்ய நாடினுன் இதைக் கண்ட இபுலீஸு நீ தவ்பாச் செய்தால் உன் பிரஜைகள் உன்னைவிட்டுப் பிரிந்திடுவார்கள் என்று கூறித்தடுத்து விட்டான், ஆகவே விவாதம் நடத்தப் பெற்று திட்டமான ஓர் முடிவு காணப்பட்டதும் அம்முடிவை ஒப்புக்கொள்வதே மனிதத்தன்மை, இதை விடுத்து தன்பிடியை விடேன் என்று தம்பட்டம் போடுவது ஷைத்தானின் இபுலீஸின் குணமாகும். மார்க்க முரண்பாடு நீக்கப்படுவதே இக் கூட்டத்தின் இலட்சியம்.

ஆகவே, இருசார்பு உலமாக்களின் விவாதமும் ஒழுங்கு முறையாய் நடத்தப்படல் வேண்டும். ஒருசாரார் பேசிமுடிந்த பின்பே மறுசாரார் பேசவேண்டும். இடையில் குறுக்குக்கேள்விகள் கேட்கவிரும்பின் மத்தியட்சம் (நீதிபதி) அவர்களின் அனுமதி பெற்ற பின்பே கேட்கப்படல் வேண்டும். விவாத முடுவு அறிவிக்கப்படும் வரை அமைதியாகவும், பொறுமையாகவும், அடக்கமாகயும், இருக்குமாறு பொது மக்களை மிக அன்புடனும் தயவுடனும் வேண்டிக்கொள்கிறேன் என்று கூறி முடித்ததும் விவாதம் ஆரம்பமாயிற்று.

முனாளுரு உடைய ஷற்துப்படி தர்வேஷ் ஹாஜியாரை முதல் முதலாகப் பேச அனுமதி கொடுக்கப்பட்டது.

# விவாத ஆரம்பம்

(முத்தாயி—(வாதி)

## 1. தல்கீன்

தல்கீன் ஓதுவது பித் அத் அதில் ஒன்றும் சிஹ்ஹத்தாகாது
—அஷ்னல் மாதலிப் 296ம், பக்கம்
முந்தின நாளையில் சாப்பாடு சமைப்பது மக்றூஹு.
—அஸ்னல் 145ம், 146ம், பக்கம்

மையித்து வீட்டிலிருந்து விருந்தளிப்பது மக்றூஹு; ஏனெனில் அது (விருந்தளிப்பது) சந்தோஷத்தை வருத்திவைக்கிறது. அது பித் அத் —என்பது ஷாபிஈ உடைய சொல்.

## 2. மையித்திற்கு தவாபை சேர்த்து வைப்பது கூடாது.

—என்பது ஷாபிஈ உடைய சொல்.

மனிதன் தன்னுடைய அமலின் தாபை மையித்திற்கு சேர்த்துவைப்பது கூடும் பிரயோஜனமளிக்கும் என்று சுன்னத் வல்ஜமா

அத் சட்டத்திலிருந்து பெரும்பாலான மார்க்க மேதாவிகள் கூறியிருக்கின்றனர்.

—கிதாபுல் உம்மு. 260ம் பக்கம்.

## 3. மையித்திற்கு

அது அல்லாதாரின் செயலிலிருந்தும் மூன்று விஷயங்கள் சேரும். துஆக் கேட்பதும் சேரும். இதல்லாத நோன்பும் தொழுகையும், அது செய்பவனுக்கே மையித்திற்குச் சேராது.

—கிதாபுல் உம்மு 46ம் பக்கம்.

## 4. மனிதனுக்கு

அவன் முயற்சி செய்ததைத்தவிர வேறொன்றுமில்லை. மையித்திற்கு சதகாபிரயோஜனம் செய்யும், செய்யும், மார்க்க சட்ட நிபுணர்களில் (புகஹாக்கள்) பெரும் கூட்டம் சதகாவின் நன்மை மையித்திற்குச் சேருமென்கின்றனர். ஷாபிஈ மத்ஹபிலிருந்து மஷ்ஹூரான சொல். குர்ஆனை ஓதுவது மையித்திற்குச் சேராது என்பதாகும். இருந்தும் மேற்கூறிய ஆயத்து அதாவது—மனிதனுக்கு அவன் முயற்சி செய்வதைத் தவிர வேறொன்றுமில்லை என்றதில் இங்கு கூறப்பட்ட மனிதனைக்கொண்டு அல்லாஹு காபிரை (முஸ்லிமை அல்ல) நாடினான். —காஸின் 199ம் பக்கம்.

(நல்லவேடிக்கை, பார்த்தீர்களா சகோதரர்களே! தர்வேஷியின் பிதற்றலை, தனக்குத்தானே பாதகமாய்ப் பேசுகிறார்,

—மொழி பெயர்ப்பாளர்.

## 5. மையித்தைக் கொண்டுபோகும் போது சப்தத்தை உயர்த்துவதும், நெருப்புச்சட்டிகளைத் தொடர்த்திவைப்பதும் மக்ரூஹு

ஹதீஸ் (முஸ்லிம்) மேலும் திக்றைக்கொண்டும், அதல்லாத பேச்சு, கதைகளைக் கொண்டும் சப்தத்தை உயர்த்தக் கூடாது அஸ்னல் மதாலிப் 312ம் பக்கம்.

## 6. இஸ்திவாவைத் தொட்டும் கேட்கப்பட்டதற்கு இஸ்

திவா வாகிறது அறியப்பட்டதும் (கைப்f) விதம் அறியப்படாததும் அதைத் தொட்டும் கேட்பது பித் அத் என்றும் சொல்லப்பட்டது இறைவன் அற்ஷின்மீது சரியொத்தான். ஒரு பெண் ஷாபிஈ இமாமிடத்தில் அல்லாஹு எங்கே என்று கேட்டாள். அதற்கு அல்லாஹு வானத்திலே என்று கூறி

ஞர்கள்; என்ற அத்தாட்சியும் நபி(ஸல்) அவர்களை மிஃறாஜ் வானத்திற்கு உயர்த்தப்பட்டதுமாயிருக்கும். அல்லாஹு அற்ஷின் மேலே என்றதற்கு அத்தாட்சிகள் இவைகளாயிருக்கும் என்று கூறினர் குற்னிசாகிப், இவற்றைக் கேட்ட நீதிபதியின் காரியதரிசி மைக் கூட்டை மேசை மேல் வைத்து ஆண்டவன் அற்ஷின் மீது இம்மைக் கூடு இருப்பதுபோலா? இருக்கிறான்? என்று கேட்டபோது, ஆம் என்று கூறினர். திரும்பக் கேட்டார், மைக்கூடு இடத்தைப் பிடித்திருப்பதுபோல் முன், பின், இடம், வலம், மேல் கீழ், அகலம், நீளம் போன்ற அளவாய்க் குறிப்புக்கூறமுடியுமா? என்று வினவியபோது முன் சொல்லியது மட்டுந்தான் எனக்குத்தெரியும், இவ்வளவு விபரந்தான் ஹாஜியார் எனக்குச் சொல்லித் தந்தார் என்று சொன்னர் குற்னி சாகிப். இக்கேள்விகளை தர்வேஸியிடமும் கேட்கப்பட்டது; அவரும் தெரியாதென்றே கூறினர். நிற்க, மிஃறாஜுக்கு றசூலுல்லா போனதின் காரணம் அல்லாஹு அற்ஷிலே இருக்கிறான் என்றதினல் தான் என்று கூறினீர்களே அப்படியானல் அல்லாஹுவுடன் வசனிக்க மூசா (அலை) தூறி சீனு மலைக்கு ஏன் போகவேண்டும்? என்று கேட்டபோது தர்வேஸியார் மௌன விரதம் அனுஷ்டித்தார்.

விவாதிக்கப்பட்ட இவ்விஷயங்கள் ஆறுக்கும் எதிராக நத்வதுல் உலமாக்கமிட்டி சார்பில் சமுகமளித்த உலமாக்கள் முறையே,

மௌலவி, S. M. A. முகம்மதிஸ்மாயில் ஆலிம்
,, M. M. இப்றாஹீம் ,,
,, S. L. முகம்மதிஸ்மாயில் ,,
,, E. L. முகம்மதிஸ்மாயில் ,,
,, A. M. முஸ்தபா ,,
,, A. M. புகாரி ,,

ஆகியோர் கொடுத்த பதில் பின்வருமாறு:-

## (1) தல்கீன்

தல்கீன் ஓதுவதை சுன்னத்தாக்கப்படும். நிஹாயா 1ம் ஜுஸ்வு 223ம் பக்கம், துஹ்றுஸ்ஸனிய்யா 34ம் பக்கம். தப்றாணி உடைய (ஸஹீஹான) ஹதீஸ் குற்றதுல்ஐன் 350ம் பக்கம், (அடக்கப்பட்ட) மையித்திற்கு தல்கீன் ஓதுவது சுன்னத். அத்காறுன்னவவீ 206ம் பக்கம், மஹல்லி 353ம் பக்கம், கப்றிலே கேள்வி கணக்குக் கேட்கப்படுமே அவனுக்கு (பராயமெற்றியவனுக்கு) தல்கீன் ஓதுவது சுன்னத்தாக்கப்படும், ஷவாஹிதுல்ஹக் 109ம் பக்கம் தத்கிறதுல்குற்துபீ 135ம் பக்கம் (பத்வாவுக்குரிய கிரந்தங்களில் நிஹாயா 1வது படியாகவும் அஸ்னல் மதாலிப் 2வதாகவுமே ஆதாரத்தின் விகிதப்படி

கணிக்கப்படும். ஆகவே தர்வேஸிகாட்டிய அஸ்னல்மதாலிபின் ஆதாரம் நிஹாயாவின் ஆதாரத்தைக்கொண்டு மன்சூகாய்விடும். (மொ-ர்)

(2) ஏழுநாளைக்கு மௌத்தானவர்களைத் தொட்டும் ஒஜீபனம ளிப்பது சுன்னத்தாக்கப்படும். ஆகவே, அந்நாட்களில் உணவளிப் பதை சுன்னத்தாக்கிக்கொண்டனர். அல்ஹாவில் பதாவா—2ம் ஜுஸ்வு 63ம் பக்கம்.

(3) மையித்திற்கு குருன்ஓதி ஹத்யாச் செய்வது சேரும். துஆச் செய்கிறதும் பிரயோஜனம் செய்யும். குருன் ஓதினதின் பின்னுலே துஆக் கேட்பது அங்கீகரிக்கப்படுவதற்கு மிகசமீபமானதாய்— முடுகுதல் உள்ளதாய் பாத்திபமானதாய்) இருக்கும், நிஹாயா 223ம் பக்கம் மையிதின் பேரால் சதகாச் செய்வதும் குருன்ஓதி ஹத் யாத் செய்வதும் பிரயோஜனம் செய்யும். இஆனு 22ம் பக்கம், பத்வாவையுடைய உலமாக்கள் கப்றிடத்தில் குருன் ஓதுவதை முஸ் தஹப்பாய் கண்டிருக்கின்றனர். ஏனெனில் (ஹதீஸில் வந்தபடி)-நிட் சயமாக (பச்சை) ஈச்சமட்டையின் தஸ்பீஹைக் கொண்டு அதா புடைய இலேசை மையித்திற்கு ஆதரவு வைக்கப்படும் பட்சம் குருனை ஓதி அதன் தவாபைஆதரவுவைப்பது மிக பாத்திபமான தாயிருக்கும். முன்னோர்களில் பெரும்பாலானோர்களும் மூன்று இமாம்களும்—ஹனபி, மாலிக், ஹன்பலீ ஆகிய மத்ஹபையுடைய இமாம்கள்—மூவரும் மையத்திற்கு குருன்ஓதி அதன் தவாபைச் சேர்த்து வைப்பதைச் சரிகண்டிருக்கின்றனர்.

(4) குருனை ஓதிக் கூலிவாங்குவது ஆகும். இது விஷயமாக சஹீ ஹான ஹதீஸே வந்திருக்கிறது. ஸஹீமுஸ்லிம்; இஆனு 2ம் பாகம் 113ம் பக்கம், அல்ஹாவிலில்பதாவா. 126ம் பக்கம்—(வஅன்லைச லில் இன்சானி என்னும்) இந்த ஆயத்தாகிறது (வல்லதீன ஆமனூ வத்தப அத்ஹும்) என்னும் ஆயத்தைக்கொண்டு (மன்சூக்.) மாற் றப்பட்டதாயிருக்கும். [புஜைறமீ] 203ம் பக்கம்.

(5) ஜனுஸாக் கொண்டு போகையில் ஷஹாதத்கலிமாபோன்ற திக்றைக்கொண்டும், பிக்றைக் கொண்டும் பராக்காகிறது சுன்னத் தாக்கப்பட்டதாயிருக்கும், இக்காலத்திலோவெனில் வாஜிபென்று சொன்னுலும் தூரமில்லை. அத்காறுன்னவவீ. 203ம் பக்கம். சிறு ஜுல் முனீற் அனசிப்னுமாலிக்கைத் தொட்டும் அசாகிற் (றஹ்) ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். ஜனுஸாக் கொண்டு போகையில் லாஇலாஹ இல்லல்லாவெனும் கலிமாவை மிகுதமாகச் சொல் லுங்கள். ஹதீஸ் (சஹீஹ் முஸ்லிம்] நிஹாயா 210ம் பக்கம்.

## (6) இறைவன்

நீங்கள் எங்கிருந்தாலும் அங்கே உங்களுடனிருக்கிறான். வானத்திலும் அவன் தான் நாயன், பூமியிலும் அவன் தான் நாயன். (அல்குருன்) ஷவாஹிதுல்ஹக் 135ம் பக்கம் பதாவா 276ம் பக்கம். நிட்சயமாக அல்லாஹு(ஜல்) திசைகளைவிட்டும் பரிசுத்தமானவன், என்பதுதான் சுன்னத் ஜமா அத்காறரின் இஃதிகாதும், ஏகோபித்த அபிப்பிராயமுமாகும்.

(சமயசந்தர்ப்பம் கருதியே அப்பெண்ணுக்கு சாபிஈ அல்லாஹு வானத்திலே என்று கூறினார்கள். இதையே ஆதாரமாய்க் கொள்ளும் பட்சம் பூமியில் அல்லாஹு இல்லையென்றாய்விடும். இது தவறு.)

(—லினுரிய ஹுமின் ஆயாதினு—நம்முடைய திருஷ்டாந்திரங்களில் காண்பித்துக் கொடுப்பதற்காகவே, என்ற ஆயத்திலிருந்து நபி பெருமான் (சல்) மிஃறாஜ் சென்றது இறைவனின் திருஷ்டாந்திரங்களில் நின்றுமாயிருக்கும். தர்வேஸி சொல்வது போல் அல்லாஹு அற்ஷிலேயே இருந்து கொண்டு நபியவர்களை அழைத்ததல்ல என்பதை அறிவுள்ள மக்கள் எளிதில் விளங்கிக்கொள்வர்]

இம்மட்டுடன் தர்வேஸ் தரப்பு விவாதமும், மறுப்பும் முடிந்தது. பகற்போசனத்திற்காக பி. ப. 2மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது

கிழுறு (ஹயாத்துநபி) (அலை) ஹயாத்தாயிருக்கிறார்கள் என்ற விசயமும் தர்வேஸியார் முகதாவிலேயே பேசி தக்க ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டது. பிற்பகல் கூட்டம் ஆரம்பமாக வேண்டிய நேரத்திற்கும் ½ மணித்தியாலம் பிந்திக் காத்திருந்தும் தர்வேஸ் ஹாஜியாரோ அல்லது அவரின் சார்பில் யாருமே சமூகமளிக்கவில்லை. உடனே கூட்ட நிர்வாகிகளும், பொலிஸ் பாதுகாவலர்களிற் சிலரும் ஹாஜியாரை (தர்வேஷ்] போய்க் கூப்பிட்டனர்.

முற்பகல் தான் கொண்டுபோன 6 விஷயங்களும் தோல்வியடைந்துவிட்டதால் பிற்பகல் கூட்டத்திற்குத் தான் போவதில் பயனில்லை. ஆகவே, என்னால் வரமுடியாது எனக்கூறி மறுத்துவிட்டார். பிற்பகல் கூட்டத்திற்கு இவர் சமூகம் கொடாததால் இவரின் ஆதாரக் கிரந்தங்களை (கிதாப்) பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. நிகழ்ச்சி நிரலிலுள்ள ஏனைய விஷயங்களையெல்லாம் இவரில்லாமலேயே உலமாக்களால் விவாதிக்கப்பட்டது.

## (7) தறுவீஹ் 20 றக் அத்

இப்னு முபாறகும், ஷாபிஈ இமாமும் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய ஊரிலே—மக்காவிலே—தறுவீஹ் 20 றக்அத் தொழுததை நான் எத்திக் கொண்டேன். இவ்வாறெ கலீபா உமறுப்னு கத்தாபின் (றலி) காலத்திலும் 20 றக்அதே நடைபெற்றது.

முவத்தா. மாலிக் இமாமுக்குரியது. 184ம் பக்கம் 1ம் ஜுஸ்வு அத்காறுன்னவவி, 232ம் பக்கம்.

## (8) ஜமா அத்தாய்

தொழுபவர்கள், தனிமையாய் தொழுபவர்கள் யாராயினுஞ் சரியே. தொழுகையில் வலள்ளாலீனுக்கும் ஆமீனுக்குமிடைறப்பிக் பிர்லி சொல்லுவது சுன்னத் தற்ஷீஹ் 54ம் பக்கம்.

## (9) உம்மிடத்தில் பை அத்

செய்பவர்களெல்லாம் அல்லாவிடம் பைஅத் செய்பவர்கள் தான். (அல்குருன்) தரீக் சம்பந்தப்பட்ட ஹதீஸை தப்ருனீ இமாம் ரிவாயத் செய்திருக்கிருர்கள். (பார்த்துக்கொள்ளவும்) ஷவாஹிதுல்ஹக் 8ம் பக்கம். ஆகவே தருயிக் வழிகேடல்ல.

## (10) உங்களில்

மவ்தானவர்களின் நலவான விஷயங்களைப்பற்றி ஞாபகப்படுத்துங்கள். ஹதீஸ் (சஹீ முஸ்லிம்) இப்னு உமர் (றலி)ரிவாயத் செய்திருக்கிருர்கள்.

அன்பியாக்களின் செய்தியை எடுத்தோதுவது வணக்கமாயிருக்கும், ஸாலிகீன்களின் செய்தியை படிப்பது பாவங்கட்குத் தெண்டகுற்றமாயிருக்கும் (சஹீ முஸ்லிம்) 211ம் பக்கம் எனவே மர்தியாக்கள் ஓதலாம்.

## (11) சுப்ஹு தொழுகையில்

2ம் றக்அத்தின்பின் குனூத் ஓதும்போது சப்தமிட்டும், கை உயர்த்தியும் ஓதுவது சுன்னத் 299ம் பக்கம் சஹீமுஸ்லிம்.

மஃமும்கள் ஆமீன் கூறுவது சுன்னத் இஆனு 366ம் பக்கம் ஹதீஸ்ஹாகிம் 157ம் பக்கம்.

## (12) மவ்லூத் ஓதுவதற்கு ஹதீஸிலேயே ஆதாரமுண்டு துறறுஸ் ஸனிய்யா 18ம் பக்கம்.

## (13) பித்ரு அரிசி 4முத்து

(1 மரக்கால்) நம்மூர்வழமைப்படி 2கொத்து. ஹதீஸில், வந்ததே போன்று—நம்மூர்வழக்கம் போல் 2 கொத்துத்தான் கொடுக்க வேண்டும்.

## (14) ஒலீமார்கட்கு நேர்ச்சை செய்வது ஆகும். பதாவா குப்ரு 586-87-89ம் பக்கம் அபூதாவூத 113ம் பக்கம்.

(15) குப்பாவைக் கொண்டேனும் சரியே கப்றின்மேல் கட்டடம் கட்டுவது ஆகும். வக்பல்லாத இடமாயிருக்கவேண்டும். புஜைறமீ 2ம் பக்கம் 318ம் பக்கம்.

(16) ஒரே கிராமத்தில் ஜனங்கள் கூடுவது கஷ்டமில்லாத ஊரில் பலஜும்ஆக்கள் நடத்துவது குற்றமாகும். ஆகாது புஜைறமீ 262ம் பக்கம்.

(17) கப்றை ஸியாறத் செய்வது இமாம்களின் ஏகோபித்த அபிப்பிராயப்படிசுன்னத்;

ஸஹீமூஸ்லிமில் ஹதீஸ் வந்திருக்கிறது; 314ம் பக்கம் ஷவாஹிதுல்ஹக் 36ம் பக்கம்.

(18) நிட்சயமாககிலுறு (ஹயாத்து நபி) இன்னும் உயிருடன் இருக்கிறுர், சஹீ முஸ்லிம் 402 ம் பக்கம் அல்ஹாவி 402ம் பக்கம்;

(19) மஹுஸர் ஓதுவது ஆகும் இதைப்பற்றி ஹதீஸ் வந்திருக்கிறது. கல்யூபி பித் அதுன் ஹசனு.

(20) பற்லான தொழுகைக்குப் பின் துஆ ஓதுவது அல்லாஹுவிடத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டதாயிருக்கும். அத்காறுன்னவவீ 86ம் பக்கம்:

(21) றசூலுல்லா (ஸல்) அவர்களுக்கு ஷபாஅத்து இல்லை என்றதும்.

(22) பூசரி இமாம் காபிற் (நஊது பில்லாஹி மின்ஹா) என்றதும், முன்னுள் ,கத்தத்திற்கு கறி சமைத்துப் பதம்பார்ப்பவர்களும் பெரும்பாவனேவைத்தவிடத்தில் பாய் போட்டுத் தொழுதவர்களுமாகிய இன்னுள் தற்வேஷியாரின் அத்தியந்த சிஷ்யர்களால் பிரசித்தப்படுத்திவந்த விஷயமாகும்.

இவ்விரு விஷயங்களும் அம்பலத்துக்கு வந்தபின் தற்வேஷியார் குபிற் விஷயமாவதைப் பயந்து தான் சொல்லவில்லை என்று நிராகரித்துவிட்டார், இவ்விரு விஷயங்களும் தல்கஸ்பிட்டி, மாந்தருவ பறகதெனியா போன்ற குக்கிராமங்களிலும் மேற்படி யாரால் கூறப்பட்டவைகளென்று நோட்டீஸ்கள் காட்டிக்கொடுக்கின்றனவென்பதை பொதுமக்கள் உணர்வார்களாக!

தர்வேசியார் வராததால் மேற் கூறப்பட்ட 7வது விஷயமிருந்து 20ம் விஷயம்வரை உலமாக்களால் பேசப்பட்டு பி. ப. 4-20க்கு நீதிபதி அல்லாமா, பத்றுல் உலமா, மௌலானு மௌலவி, முகம்மத் அலிமரைக்கார், பின் அஹ்மத் மரைக்கார் அவர்களால் தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

# அறபு (பத்வா) தீர்ப்பின் மொழிபெயர்ப்பு.

முபஸ்மிலன்! முஹம்திலன்!! முஸல்லியன்!!! முசல்லிமா!!!!

**நத்வதுல்** உலமாக்கமிட்டி சார்பில் சமூகம் கொடுத்த உலமாக்களுக்கும் அன்சார் சுன்னத் சங்க சார்பில் சமூகமளித்த தர்வேஷ் ஹாஜீயாரும் அவரின் சகாக்களுக்குமிடை முனுளரு உடைய ஷற்துப்படி நடந்தேறிய விவாதத்தில் எனது தீர்ப்பு.

தர்வேஸ் ஹாஜியாரை அல்லாஹு நேர்வழி காட்டுவானுக ஆமீன்.

(1) தல்கீன் பிராயம் எய்தியவர்கட்கு தல்கீன் ஓதுவது சுன்னத் ஆபி உமாமா (றலி) அவர்களைத் தொட்டும் தப்ருனி ரிவாயத் செய்திருக்கிருர்கள். நபி (ஸல்) கூறியிருக்கிருர்கள். உங்கள் சகோதரர்களில் ஒருவர் மவ்தாகி அவருடைய கப்றில் மண்ணை மூடிவிட்டீர்களாயின் உங்களில் ஒருவன் அவருடைய கப்றின் தலைமாட்டில் நின்று, இன்னுளுடைய மகன் இன்னுனே என்று சொல்லவும் அப்படிச் சொல்வது அவனுக்குக் கேட்கும். நிஹாயா 223ம் பக்கம்.

பிரபல சஹாபாக்களில் நின்றும் ஒருவரான அம்ரிப்பனுல் ஆஸ் (றலி) நன் மகனுக்கு தன்னுடைய மரண தறுவாயில் வசியத் செய்தார்கள். என்னை அடக்கம் செய்வீர்களாயின் என் கப்றைச் சூழ்ந்து நில்லுங்கள். ஒரு ஒட்டகையை அறுத்து அதன் இறைச்சியைப் பங்கு வைக்கக்கூடிய அளவு நேரம் நில்லுங்கள். உங்களுடைய சொற்களைக் கொண்டு (தத்பீத்) மருகுதல் பெறும் வரை, ஹதீஸ் (சஹீமுஸ்லிம்) எனவே, தல்கீன் ஓதுவதினுல் அந்தக் கப்றை உடையவர் பிரயோஜனம் அடைகிருர், மேற் கூறப்பட்ட ஹதீஸே இது சுன்னத் என்பதற்கு தக்க அத்தாட்சியாகும்.

(2) குறிப்பான தினங்களில் இறந்தவர்கள் பேரால் போசன மளிப்பதனுல் குற்றம் ஒன்றும் நேர்ந்துவிடாது:

நாயகம் (சல்) மரணித்தவர்கள் மீது நீங்கள் தானதர்மம் செய்யுங்கள் என கூறியிருக்கிருர்கள் அப்படிச் செய்ய சக்தியில்லாவிடில் 2 றக் அத் தொழுது கொள்ளவும், அத் தொழுகையில் சூருபாத்திஹாவையும் ஆயத்துக் குர்ஸியையும் குல்ஹுவல்லாவையும் ஓதிக்

கொள்ளுங்கள், அதன்பின் இறைவா! இத்தொழுகையை உனக்காகவே தொழுதேன், என் நாட்டத்தை நீயறிவாய், இதன் கூலியை இன்னானுக்கு சேர்த்தருள் என்று பிரார்த்தித்தால் அவ்விதம் அங்கீகரிக்கப்படும். என்று திருவுளம்பற்றியதாய் ஹதீஸ் (முஸ்லிம்) வந்திருக்கிறது: மரணித்தவர்கள் மீது உணவளித்துத் தானதர்மம் செய்வதை பத்வாவுடைய இமாம்கள் முஸ்த்ஹப்பாய்க் கண்டிருக்கின்றனர். அல்ஹாவி லில்பதாவா 2ம் பாகம் பதாவா குப்ரு 2ம் பாகம் 8ம் பக்கம். ஆகவே, நாட்குறித்து தற்போது நடைமுறையிலிருந்து வருவதை குற்றம் சொல்வதற்கில்லை; ஜாயிஸ்:

(3) குர்ஆனை ஓதி அதன் தவாபை மையித்திற்கு சேர்ப்பிக்கலாம். குர்ஆன் ஓதியபின் துஆக் கேட்கும் (நிபந்தனை) ஷர்த்தைக் கொண்டு இது விஷயமாக ஹதீஸே வந்திருக்கிறது.

அபூஹுறைறாவைத் தொட்டும் ஹாகிம் ரிவாயத் செய்திருக்கிறார்கள். யாராவது ஒருவன் தன் பெற்றோர்களின் சமாதியைத் தரிசித்து சூறா யாசீனை ஓதிப் பிரார்த்தித்தால் ஒவ்வொரு எழுத்தினதும், ஆயத்தினதும் எண்ணிக்கைக்கும் பிழைபொறுக்கப்படும்

இமாம் அஹ்மத்பின் ஹன்பல் (றஹ்) அவர்களைத் தொட்டும் வந்திருக்கிறது.

அடக்கப்பட்ட சமாதிகளிடம் (கப்புறுகளிடம் நடந்துபோவீர்களாயின் சூறுபாத்திஹா, குல்ஹுவல்லா, சூறதுல் பலக் குறதுன்னாஸ் இவற்றை ஓதி [அவற்றின் (நன்மை) தவாபை சேர்ப்பியுங்கள் நிட்சயமாக அது அவர்கட்குச் சேரும். இஆனு 142ம் பக்கம் இப்படித்தான் பொருள் சம்பந்தப்பட்ட அமல்களும் சேரும். இது விஷயமாக ஜாபிர் (றலி) அவர்களைத் தொட்டும் ஹதீஸ் வந்திருக்கிறது ஜாபிர் கூறுகிறார்கள். நான் றசூலுல்லாவுடன் தொழுதேன். தொழுகை முடிந்ததும் ஒரு ஆட்டைக் கொண்டுவந்து அறுத்தார்கள் பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று அறுத்தார்கள். அதன்பின் அவர்கள் ஆண்டவனே! என்னைத் தொட்டும், என் உம்மத் மார்களில் உழ்ஹிய்யாக் கொடாதவர்களைத் தொட்டும் இதைப் போதுமையாக ஆக்கிவைத்தருள். என்று கூறினார்கள். அபூதாவூத் திர்மதி குற்றதுல் ஐன். 63ம் பக்கம் நிஹாயா 223ம் பக்கம். குர்ஆனை ஓதி அதன் தவாபை மவ்தானவர்கட்கும் ஹயாத்தானவர்கட்கும் சேர்த்துவைப்பது ஆகும்: பதாவா குப்ரு 4ம் பாகம் 20ம் பக்கம் ஸஹீ முஸ்லிம் 141ம் பக்கம் புஜைறமீ 251ம் பக்கம்.

இமாம் ஷாபிஈமுதல் அவர்களின் அஸ்ஹாபுகளும் குர்ஆன் ஓதி அதற்கு அடுத்ததாய் துஆக் கேட்பது ஸுன்னத் என்று குறிப்பாகக் கூறினர். இன்னும் இப்னு உமர் (றலி) அவர்களை அடக்கிய பின்னர் ஸூறத்துல் பகரு முதல் இறுதிவரை ஓதும்படி வசிய்யத்துச் செய்தார்கள் மய்யித்திற்கு எல்லாவித தவாபும் சேரும் என்பதற்கு ஆதாரமாக, இப்னு மாஜா, திர்மதி, அபூதாவூத் ஜாபிர்

(றலி) ஆகியோரைத் தொட்டும் ஹதீஸ் வந்திருக்கிறது இன்னும் இப்னு அப்பாஸ் (றலி) அவர்களைத் தொட்டும் அபூதாவூத், இப்னு மாஜாரிவாயத் செய்கிறார்கள்.

ஒரு பெண் கடல் யாத்திரை செய்யும்போது தன்யாத்திரை விமோசனத்திற்கு 1 மாதம் நோன்புவைக்க நேர்ந்திருந்தாள். நோன்பு நோற்பதற்கிடையில் மரணமடைந்துவிட்டாள். இவளின் மகள் நபி (ஸல்) அவர்களிடம் தன் தாயின் செய்தியை பற்றிக் கேட்டாள். தன் தாயைத் தொட்டும் நோன்பு வைக்கும்படி ஏவினார்கள் எனவே, ஓதல் முதல் எந்த வணக்கமும் தவாபு கிடைக்கு மென்பதற்கு மிகுதமான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆகவே, தற்காலம் நடைமுறையிலிருக்கும் கத்தம், பாத்திஹா இவற்றினால் கப்ருளிகட்குப் பிரயோஜனமுண்டு. தவாபு கிடைக்கும்.

## (4) சஹீஹுஸ்ஸித்தா

முஉதபரான 6 ஹதீஸுக்கிரந்தங்களின்படி, குர்ஆனை ஓதி அதற்குக் கூலிவாங்குவது ஆகும். இஆனு 2ம் பாகம் 113ம் பக்கம் அல் ஹாவி 126ம் பக்கம். மனிதனுக்கு அவன் முயற்சி செய்வதைத் தவிர வேறொன்றும் இல்லை என்னும் இந்த ஆயத்தை கப்ருளிகட்கு (கத்தம்) குர்ஆன் ஓதி சேர்ப்பித்தல் சேராது என்னும் விசயத்திற்கு ஆதாரமாய் ஹாஜியாரால் கூறப்பட்டது. இவரின் விளக்கக்குறைவையே காட்டுகிறது. ஏனெனில் இவ்வாயத்தில் கூறப்பட்டதின் சாரம் மனிதன் முயற்சித்தால் முயற்சி பிரயோசனம் கிடைக்கமாட்டாது என்று கருத்துரை கூறுவது? இது அவரின் அறியாமையிலொன்று. ஆகவே இவ்வாயத்தும் உலமாக் கமிட்டியாருக்கே சாதகமாயிருக்கிறது. தவாபு சேரவேண்டும் என்று நாடி முயற்சிப்பவனின் முயற்சி வீண்போகாது. கிடைக்கவே செய்யும். இந்த ஆயத்து விஷயமாக தப்ஸீர் ஜமலில் மூன்றுவிதம் தப்ஸீருடைய இமாம்கள் கூறியிருக்கின்றனர்.

1வது இந்த ஆயத்து முன்வேதம் கொடுக்கப்பட்டவர்கள் தவ்றூத் ஸபூர்—இன்ஜீல்—சம்பந்தமானது என்றும், 2வது மனிதன் என்ற இடத்தில் கருதிய மனிதன் காபிர் என்னும்—(முஸ்லிமல்ல) 3வது, வல்லதீன்ஆமனூ, வத்தபஅத்ஹும், என்னும் வசனத்தைக் கொண்டு, மன்சூக் என்றும் கூறியிருக்கின்றனர். இதைக்கவனித்தாலும் ஹாஜியாருக்கே பாதகமாய்முடிகிறது. குர்ஆனுக்குக் கூலிவாங்குவதற்கு ஆதாரமாக புகாரி, முஸ்லிம், அபூதாவூத், இப்னுமாஜா, நஸஈ, இபுனு ஜரீர், ஹாகிம், பைஹக்கீ ஆகிய கிரந்தங்களெல்லாம் சாட்சிபகர்கின்றன. அதன் பேரில் எடுக்க வேண்டியதில் மிகவும் தகுமானது அல்லாவின் கிதாபாக இருக்கும்.

**ஆகவே, குருனை ஓதி அதற்குக் கூலி வாங்கலாம் அது ஹலாலாகும்.**

மையித்தைக் கொண்டு போகையில் ஷஹாதத் போன்ற நல் வாக்கியங்களைச் சொல்வதிற் குற்றமொன்றுமில்லை. சில இமாம் கள் அதை சுன்னத் என்று கூறுகிறார்கள்.

இன்னும் இமாம்களிற் சிலர் வாஜிப் என்று சொன்னாலும் கூட தூரமில்லை. ஏனெனில், ஷறகிலே விலக்கப்பட்ட வீண்பேச்சுக்க ளைப் பேசிக்கொண்டு [ஜனாஸாவைக் கொண்டுபோகும் போது] நடப்பதைவிட கலிமாச் சொல்லி நடப்பது எவ்வளவோ சிறந்தது.

அனசுப்னு மாலிக்கைத் தொட்டும் அஸாகிற் [றலி] ஹதீஸ் ரிவாயத் செய்திருக்கிறார்கள். நீங்கள் மையித்தின்போது கலிமாவை மிகுதமாக்குங்கள். என்று வந்திருக்கிறது. நைனுல் மறும் ஷறகில் வந்திருக்கிறது. இக்காலத்தில் மனிதர்கள் முற்காலத்தைப்போல் (றசூலுல்லாவின் காலம்) மவுத்தைப்பற்றியும், ஆகிறத்தைப்பற்றி யும் யோசித்தவர்களாய்ப் போகக் காணப்படவில்லை. எனவே, விரைந்து திக்றுகள், கலிமாக்களைச் சொல்லிக் கொண்டுபோவதிற் குற்றமில்லை ஒரு விஷயத்தில் இரண்டு குற்றம் செய்ய ஏற்படுமா னால் பெரிய குற்றத்தை தவிர்த்து சிறு குற்றத்தைச் செய்வது மார்க்க சட்டமும் உலக சட்டமுமாகும். இதற்கு உவமானம், ஒருவனின் கால்விரலில் சர்ப்பம் தீண்டிடுமானால் விஷம் ஏறி இவனை ஹலாக்காக்கிவிடும் என்று பயந்து விரலைமட்டும் துண்டித்து விடுவது போலாம். சப்தமிடுவது பித்அத். புறம் பேசுவதும், வீண்வார்த்தை பேசுவதும் ஹறாம்.

ஆனதால் எங்கள் ஊர்களில் தற்கால நடைமுறையிலிருந்து வருவது போல் ஷஹாதத் கலிமா ஓதுவது விலக்கப்பட்டதல்ல ஹதீ ஸும் வந்தேயிருக்கிறது. விலக்கப்படவில்லை.

## (6) ஜாயிஸ்.

அல்லாஹு குறிக்கப்பட்ட இடத்தை விட்டும் தூய்மையான வன், பரிசுத்தன் குறுன் கூறுகின்றது. நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான். வானத்திற்கும் அவனே நாயன் பூமிக்கும் அவனே நாயன். நபி (சல்) தவ்ற் குகையில் அபூபக்க ரிடம், நிட்சயமாக அல்லாஹூ நம் முடனிருகிறான். நீர் துக்கப் படாதீர் எனக்கூறியிருக்கிறார்கள். ஆகவே அல்லாவுக்கு உயர்த்தி யான இடமுண்டு. அதற்கு மேல், கீழ், வலம், இடம், முன், பின் என்ற பாகுபாடு சொல்லல் குற்றமாகும்.

இஸ்தவா 'என்னும் அறபிப் பதத்திற்கு அகராதியில் பல கருத்துக்கள் உண்டு. குறுனில் 6 இயக்கங்களில் இது வருகின்றது

இவற்றிற்கு தஉவீல் மஃனுவே கருதப்படும் முதஷாபி ஹான பதங்களில் இதுவும் ஒன்ருகும்.

ஆகவே அல்லாஹு அற்ஷின் மேல் கீழ் முன், பின் இருக்கின்ருன் என்று கூறல் தவருகும்.

ஷவாஹி துல்ஹக் 125ம் பக்கம். பதாவா. 276ம் பக்கம் அல்லாஹுவுக்கு உயர்த்தியாகிய இடமுண்டு என்பதைக் கருதியே ஷாபிஈ வானத்தில் என்று அப்பெண்ணுக்குக் கூறினர்கள். அல்லாஹுவின் திருஷ்டாந்திரங்களைக் காண்பிக்கவே நபி (சல்) அவர்களை மிஃருஜுக்கு அழைக்கப்பட்டது.

## (7) தருவீஹ் தொழுகை 20 றக் அதாயிருக்கும்.

மாலிக் இமாம் உடைய முவத்தா 1ம் பாகம் 134ம் பக்கம் அத்காறுன்னவவீ 232ம் பக்கம்.

இஜ்மாஉஸ்ஸஹாபா சஹாபாக்கள் 20 றக் அதையே ஜமாஅதாய் உபய்யிப்னு கஃபு (றலி) தலைமையில் தொழுதிருக்கின்றனர்.

(8) தொழுகையில் வலள்ளாலீனுக்கும் ஆமீனுக்குமிடையே றப்பிக்பிற்லி ஓதுவது (ஓதுகிறவர் மட்டும்) சுன்னத் தர்ஷிஹ் 54ம் பக்கம்.

## (9) தருயிக்குகள், அலவிய்யா கக்திரிய்யா

(காதிரிய்யா, ஷாதிலிய்யா, நக்ஷபந்திய்யா) போன்ற வழிகள் அழகான காரியங்களில் நின்றுமுள்ளவை வழிகேடல்ல. ஒரு ஷெய்கு சில முரீதீன்களைச் சேர்த்து அவர்கட்கு நல்வழியில் நடக்கும்படி கூறி அதின்பேரில் வாக்குறுதி (பைஅத்) எடுப்பது வழிகேடென்று சொல்வது அறிவீனமாகும். திக்றுகள், அவ்றுதுகள் தனித்தோ, அல்லது கூட்டமாய்க் கூடியோ செய்வது விலக்கப்பட்ட கருமம் அல்ல.

மனிதர்கட்காகவேண்டி வெளிவந்த உம்மத்தில் நீங்கள் சிறந்த கூட்டத்தவர்களாக ஆகிவிட்டீர்கள், ஏவல் விலக்கல் செய்வதால் சிறந்த கூட்டம் என குருன் கூறுகிறது. அறியாதவர்கள் அறிந்தவர்களிடம் கேளுங்கள் (ஹதீஸ்) உலமாக்கள் நபிமார்களின் அனந்திரகாறர்கள், அவர்களைப் பின்பற்றுங்கள். அவர்கள் இரு உலகத்தின் தீபங்களாயிருக்கும். (ஜாமிஉஸ்ஸஈர்) தீன் என்பது உபதேசம் என்று நபிபெருமான் கூறினர்கள். அதற்கு சஹாபாக்கள் யாருக்கு உபதேசம் சொல்வதென்று கேட்டார்கள். அல்லாவுக்கும், றசூலுக்கும், வேதத்திற்கும், முஸ்லிம்களில் பெரியாருக்கும், பொது மக்களுக்கும் என்று கூறினர்கள். ஒரு கூட்டத்தவரின் ஷெய்கானவர் ஒரு சிறு உம்மத்துக்கு நபி போலாகும். (ஜாமிஉ)

(10) மர்திய்யாக்கள் ஓதுவது குற்றமன்று. மர்திய்யாக்கள் ஓதலாம். அதற்கு ஆதாரம் ஹதீஸிலேயே உண்டு. உங்களின் மவ்தாக்களின் குணதிசயங்களில் அழகானதை எடுத்தோதுங்கள் என்று

வந்திருக்கிறது. இப்னு உமறைத் தொட்டும் ரிவாயத் செய்யப் பட்டிருக்கிறது. அத்காறுன்னவவீ 211ம் பக்கம்.

## (11) மவ்லூது ஓதுவது உவக்கப்பட்ட நற்கருமங்களில் உள்ளது.

பித்அத் ஹசனு ஸுன்னதான கர்மமாயிருக்கும் அன்பியாக்களின் சரிதைகளைக் கூறுவது (இபாதத்) வணக்கமாயிருக்கும். அவ்லியாக்கள் ஸாஹீன்களின் சரிதைகளை ஓதுவது பாவங்கட்குத் தெண்டகுற்றமாயிருக்கும். ஹதீஸ்—தைலமீ.

முகைருபின் ஷஃபா கூறுகிறார்கள்: நான் அஞ்ஞானகாலத்தில் நபி (ஸல்) அவர்களின் செய்திகளைப் பாடமிட்டிருந்தேன். நான் இஸ்லாத்திற்கு வந்தபின் நாயகம் (ஸல்) அவர்களிடம் அஞ்ஞான காலத்தில் நபியவர்கள் செய்தியைப் பாடமிட்டதைப்பற்றி தெரிவித்தேன். இதைக் கேட்ட நாயகம் (ஸல்) எனது தோழர்கட்கும் நீர் பாடமிட்ட யாவற்றையும் சொல்லிக்காட்டுவதை விரும்புகிறேன், என்று சந்தோஷத்துடன் அனுமதியளித்தார்கள். நான் 2, 3 நாள் வரையும் கூறினேன்—ஹதீஸ்—அன்பியாக்கள் அவ்வியாக்கள் மனுகிபு—மவ்லித்—ஓதுமிடத்தில் அல்லாஹுவின் றஹ்மத் இறங்குகிறது. ஹதீஸ்—தைலமீ.

இமாம் ஹசன் பசறி (றலி) சொல்கிறார்கள். உஹத் மலைபோல் என்னிடம் தங்கமிருந்தாலும் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தைக் வலுப்பமாக்குவதற்காக செலவு செய்வேன் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த தினத்தைக் கண்ணியப்படுத்துவதற்காக மனிதர்களைச் சேர்த்து மவ்லித் ஓத தயார் செய்வானுகில் கியாம நாளில் நபிமார்கள் கூட்டத்துடன் ஆண்டவன் எழுப்புவான் ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். என்னை உகந்தவன் சொர்க்கத்தில் என்னுடன் இருப்பான். (ஹதீஸ்)

ஆகவே, றசூலுல்லா (ஸல்) அவர்கள் பேராலோ அல்லது வேறு அன்பியாக்கள், அவ்லியாக்கள் பேராலோ மவ்லித் ஓதி அதற்கு செலவு செய்வது (முஸ்தஹப்பு.)

## (12) சுப்ஹு தொழுகை 2ம் றகஅத் றுகூ உக்குப் பின் குனூத் ஓதுவது சுன்னத்.

இமாம் சப்தமிட்டு ஓத மஃமூக்கள் ஆமீன்கூற வழங்கப்பட்டு வரும் குனூத் சுன்னத் அபூஹுறைறுவைத் தொட்டும் ஹாகிம் ரிவாயத் செய்திருக்கிறார்கள் ஹதீஸ் 157ம் பக்கம் மஹல்லி தற்போது ஓதப்பட்டுவரும் குனூத் (அல்லாஹும் மஹ்தினி) என்பதையே றசூலுல்லா (சல்) அவர்கள் ஓதியதாக பைஹக்கீ ரிவாயத் செய்திருக்கிறார்கள்:

ஆகவே, குனூத் ஓதலாம் ஓதுவது சுன்னத்துமாகும்.

## (13) ஷகாதுல் பிதிற்

1 மரக்கால் 4 முத்து இவ்வூர்களில் தற்காலம் நடைபெறும் கணக்குப்படி 2 கொத்து (அரிசி) ஹதீஸ்திர்மதி.

## அன்பியாக்கள்

## (14) அவலியாக்களுக்கும் றவ்ளா ஷரீபுக்கும்நேர்ச்சை செய்வது ஆகும்.

பதாவாகுப்ரு 266ம் பக்கம். அபூதாவூத் 13ம் பக்கம். ஷற் காவி 344ம் பக்கம் இப்னுமாஜா 353ம் பக்கம் ஷாபிஈ இமாம் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். மக்காஷரீபுக்கு நேர்ச்சை செய்வது; ஹறம் ஷரீபில் குடியிருப்பவர்கட்கு நேர்ச்சை செய் வது; ஹயாத்தான ஒலிமார்கட்கு நேர்ச்சை செய்வது; இதெல் லாம் ஆகும் நேர்ச்சைசெய்தால் கட்டாயம் நிறைவேற்றவேண் டும். நிறைவேற்றுவது வாஜிபு காலஞ்சென்றுபோன ஒலிமார் கட்கு நேர்ச்சை செய்வதற்கு ஒரு ஷற்து: அதாவது; ஏழை மிஸ் கீன்களுக்கு அந்த நேர்த்தியை நிறைவேற்றுவதை நிய்யத் செய்ய வேணும், அப்படி நேர்ந்தால் சிஹ்ஹத்துத்தான் ஆகவே, முபா ஹான விசயத்தில்தான் நேர்ச்சை செய்யவேணும், பாபமான விஷயத்தில் அல்ல. றபான் அடிக்க நேர்ந்த பெண்ணுக்கு கூட நேர்த்தியை நிறைவேற்றும்படி நபி (ஸல்) கட்டளையிட்டிருக் கிறார்கள்.

(15) நபிமார்கள், அவ்லியாக்களுடைய கபுறுகட்கு கட்டடம் கட்டுவது ஆகும். பொதுமக்களாயின் அவர்களின் சொந்தப்பூமி யாயிருந்தால் மக்றூஹூ வக்பான தலமாயின் ஹறாம்.

## கல்முனைக் குடிபோன்ற

(16) ஒன்று சேர்வது கஷ்டமில்லாத கிராமத்தில் ஒன்றுக்குமேற் பட்ட ஜூம் ஆக்கள் கூடாது புறைதமீ 262ம் பக்கம் மற்றும் ஷாபிஈ உடைய கிரந்தங்களும்.

(17) அன்பியாக்கள் அவ்லியாக்கள் சமாதிகளைத் தரிசிப்பது (ஸியா றத் செய்வது) சுன்னத் ஸஹீஹான ஹதீஸ்படி ஷவாஹிதுல் ஹக் 37.

18) நிட்சயமாக கிழுறு (ஹயாத்து நபி) ஹயாத்தாயிருக்கிறார்கள் ஸஹீமுஸ்லிமுடைய ஹதீஸூப் பிரகாரம் 142-ம் பக்கம்: நிட்சய கிழுறு ஆகிறவர் வயது முதிர்ந்தவர். நம் பார்வையை விட்டும் மறைக்கப்பட்டவர். கியாமநாள் வரைக்கும் தரிபட்டிருப்பார்கள்.

கிலுறு நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலிருந்து நபியவர்களைச் சந்தித்திருக்கிறார்கள்; அபூபக்கர் சித்தீக் (றலி) அலி (றலி) இவர்களைக் கண்டிருக்கிறார்கள்; றூஹுல்பயான் 5-ம் பாகம் 476ம் பக்கம்

நால்வரை கியாமபரியந்தம் உயிருடன் தரிபடுத்தியிருக்கிறான்; அவர்களாவன இத்ரீஸ் (அலை) இல்யாஸ் (அலை) ஈசா (அலை) கிலுறு (அலை)

ஒரு வீட்டுக்கு 4 தூண்கள் இருப்பதுபோல் நேரான மார்க்கத்திற்கும் 4 தூண்கள். அத்தூண்கள்.

றசூல்மார்கள் நபிமார்கள், அவ்லியாக்கள் ஸாலிஹான முஉமினூன்கள். இப்பூலோகம் 40 அப்தால்களை விட்டும் ஹயாத்தான ஒலிமார்களைவிட்டும் ஒழிந்திராது. யவாகீத் 82-ம் பக்கம். ஆகவே, கிலுறு நபி ஹயாத்தாயிருக்கிறார்கள். ஹதீஸில் வந்தபடி

(19) மஹ்ஷர் ஓதுவது பித் அதுன்ஹசனு அழகிய முறையாகும். வெறுக்கப்பட்டதல்ல. இது விஷயத்தில் ஹதீஸ் வந்திருக்கிறது. அறபா தினத்தில் நபி [சல்) குத்பா ஓதுவதற்கு முன் இப்னு ஜுறைரிடம் ஜனங்களை வாய்பொத்தியிருக்குமாறு கட்டளை பண்ணினார்கள். அதுபோல அவர்களும் செய்தார்கள்; ஸஹீஹுல் புஹாரி 449-ம் பக்கம்.

ஆகவே, நம் பகுதிகளில் குத்பா ஓதுவதற்கு முன் ஓதப்படும் மஹ்ஷர் வெறுக்கப்பட்டதல்ல ஓதலாம்.

(20) பற்லுத் தொழுகைக்குப் பின்னால் இமாம் துஆ ஓத மஃமூம்கள் ஆமீன் கூறுவது முஸ்தஹப்பு. ஆகுமாக்கப்பட்டது. சஹாபாக்கள் நாயகம் (சல்) அவர்களிடம் எந்நேரத்தில் ஓதும் து ஆ. வரிசையானது, என்று வினவினார்கள். இரவின் பிற்பகுதியிலும், பற்லுத் தொழுகைக்குப் பின்னாலும் ஓதுவது என்று விடை பகர்ந்தார்கள். ஹதீஸ்—திர்மதி; ஒருவர் துஆ ஓத மற்றவர்கள் ஆமீன்கூற ஜனங்கள் சேகரமாகமாட்டார்கள், அவர்களுடையது ஆவை அல்லாஹுல் செய்தே ஒழிய ஹதீஸ்—பத்ஹுல் பாரி 155ம் பக்கம் றசூலுல்லாஹு (ஸல்) அவர்கள் ஒவ்வொரு பர்லு சுன்னத் தொழுகைக்கும் பின்னால் இறைவனிடம் துஆக் கேட்பவர்களாக இருந்தார்கள். ஹதீஸ்—புகாரி

எனவே, தொழுகைக்குப் பின்னால்இமாம் துஆ ஓத மஃமூம்கள் ஆமீன் கூறிவரும் துஆ நற்கருமங்களில் நின்றும் உள்ளதாயிருக்கும்.

நிகழ்ச்சியில் குறிப்பிட்டுள்ளவற்றில் 3 விஷயம் எடுக்கப்படவில்லை. 1-வது றசூலுல்லாவுக்கு ஷபா அத், தாபித்தில்லை என்றது

2வது பூசரி இமாம் காபிர் என்றது: 3-வது கொடியேற்றுவது முந்தின 2 விஷயங்களும் ஹாஜியார் தர்வேஸியால் கூறப்பட்டது. உண்மையாயிருக்கும் பட்சம் இவர் ஈமானை விட்டும் உரியப்பட்ட காபிராய்விட்டார். ஒருவரைக் குறித்துக் காபிர் என்று சொன்னால் சொல்லப்பட்டவரிடம் காபிருக்குரிய அத்தாட்சியில்லாவிடின் சொன்னவரையே அச்சொல் சாரும் றசூலுல்லாவுக்கு ஷபாஅத் உண்டு! பாவிகளை மன்ருடி கரைசேர்ப்பார்கள். இதற்கு ஆதார மாக எவ்வளவோ ஹதீஸ்கள் வந்திருக்கின்றது. அவ்வியாக்க ளுடைய இடங்களில் கொடியேற்றுவது இது ஒரு ஒலியுடைய இடம். ஏழை மிஸ்கீன்களுக்கு அன்னதானம் கொடுக்கப்படும் என்பதை அறிவிப்பதற்காகவே. அதுபித் அத் முபாஹா - செய்வதால் அதாபு மில்லை. தவாபுமில்லை. ஆனல் அவ்விடத்தில் வீணான பணச்செலவு கள் செய்யப்படுவதும், விரோதமான கருமங்களை நடத்தப்படுவதும் விலக்கப்பட்ட கருமங்களாகும்.

தர்வேஸ் சாகிப் அவர்களால், பித் அத், பித் அத் என்றே சர்வ சாதாரணமாய்ப் புழக்கத்தில் அவரின் வாக்கியங்கள் (போதனைக ளில்) காணக்கிடக்கிறது. பித் அத் என்ருல் புதிசானது. றசூ லுல்லாவுடைய காலத்தில் இல்லாதது என்றே பொருள்படும். ஆகவே பித் அத் என்பதைச் சிறிது விபரிக்க விரும்புகிறேன்

## பித்அத் 5 வகைப்படும் 1வது வாஜிபான பித்அத்

உதாரணமாக, குருனை எழுதி புத்தகருபத்தில் அச்சிடுவது மார்க்க சட்ட திட்டங்கள் உடைய கிதாபுகளை வைத்திருப்பது நஹ்வு, சர்பு, பிக்ஹு படிப்பது போன்றது. பின்னுள்ளவர்கட்கு மார்க்கத்தை எத்திவைப்பது வாஜிபு வாஜிபைவிடுவது ஹறும் 2வது சுன்னத்தான பித்அத். உதாரணம், ஜமா அத்தாக தறுவீஹு தொழுவது: மத்றசாக்கள்: கல்லூரிகள் கட்டுவது, போல் உள்ள பொது நன்மைக்குரிய விஷயங்கள், இமாம் ஷாபிஈ கூறுகிருர்கள்: குருன், ஹதீஸ் இஜ்மாஉ: கியாஸ் இவைகளுக்கு மாற்றமாக உள்ளது வழிகெட்ட பித் அத் செய்யத் தகாதது. புதிதாக உண்டாக் கப்பட்ட நல்லகருமம் அழகான பித்அத் ஸுன்னத் செய்யத் தகுந் தது இது விஷயத்தில் மதுஹபுடைய எல்லா இமாம்களும் ஏகோ பித்து ஒன்றுபட்டிருக்கிருர்கள். 3வது மக்றூஹான பித்அத் பள்ளி வாசல்களுக்குச் சித்திரவேலை செய்து அலங்கரிப்பது: மைபூசி மினுக்குவது போற்கொத்தவை. 4வது ஹறுமான பித்அத் சுங்கவரி எடுப்பது போன்றவை, ஆகுமான பித்அத் 2, 3, கறிகளுடன் சாப் பிடுவது. பஸ், கார், சைக்கிள், மாட்டுவண்டிக் கரத்தை போன் றதில் பிரயாணம் செய்கிறது போற்கொத்தவை. ஆகவே, பித் அத், பித்அத், பித்அத், என்று ஹாஜியாருக்கு கூப்பாடு போடத்

தெரியுமே தவிர விபரம் அறியத்தவறிவிட்டார். றசூல் (ஸல்) அவர்கள் நான் இலேசான நேர்மையான, தொழிலர்ன மார்க் கத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். மார்க்கத்தில் வெறுப்புண்டாகச் செய்யாதீர்கள் என்று கூறியிருக்கிருர்கள். சுருங்கச் சொல்லின் குரூன் உலகத்தில் அச்சிட்டது கி. பி. 1694ம் வருடம்தான். கிதாபுகள் கோர்வை செய்ததும் பெரிய பெரிய ஸஹாபாக்கள் மறைந்து போய் ஹிஜ்ரி 120க்குப் பிறகுதான். தர்வேஷ் ஆதார மாகத்தேடும் புகாரி முஸ்லிமும் பித்அத், குரூன் அச்சிடப்பட்டது முதம் எல்லா ஹதீஸ் கிதாபுகளும் பித்அத், மார்க்கத்தில் வெறுக் கப்பட்டது. வழிகேடு என்று சொல்ல நேரிட்டால் இன்றைய உலகில் இவைகள் இல்லாவிட்டால் முஸ்லிம்களின் நிலை என்னவாகும்? மார்க்கத்தை எப்படி அறிவது? அந்தோ அறியாமை! அறியாமை!! இனிவருங்காலமாவது பித்அத்தின் விப ரங்கள் அறிந்து கொள்வதுடன் போதனை மூலம் பொதுமக்களைக் குழப்பத்தில் ஆக்காதிருக்க ஆண்டவன் நல்லருள் செய்வானுக.

## என் அபிப்பிராயம் பூரணநம்பிக்கையும் என் திடமான உறுதிப்பாடுமாகிறது.

நிட்சயமாக நேர்வழியை கூட்டம் ஹக்களவில் தலைசாய்க்கக் கூடிய சுன்னத் வயஜமா அத் என்ற மாபெரும் கூட்டம் ஹக்கள வில் தலைசாய்க்கக்கூடிய சுன்னத் வல்ஜமா அத் என்ற மாபெரும் கூட்டம், உறுதியான நேர் பாதையில் தரிபட்டிருக்கிருர்கள் வழிகெட்ட கூட்டமாகிய இவ் மஹ்ஹாபிகள் நேர்வழியை விட்டும் கால் சறுகிவிட் டார்கள். அவர்கள் வழிகெட்டவர்கள், அத்துடன் பிறரையும் வழி கெடுப்பவர்கள் ஹக்கை விட்டும் வழிசறுகியவர்கள்! நேரான பாதையை விட்டும் நூரமானவர்கள் இவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்மார்களான சுன்னத் வல்ஜமாஅத் கூட்டத் தினரில் பாரவன்களான இமாம்கள், உலாக்கள், மார்க்க சட்ட நிபுணர்கள் ஆகியோரின் வழிக்கும் முரன்பட்டவர்கள்,

ஆண்டவா! மனுஜின் வர்க்கத்தின் இறுதி நபியாம் நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் பொருட்டால் கிருபையால் இந்தக் காலத்தில் பரந்திருக்கும்படியான வஹ்ஹாபியக் குழப்பத்தை விட்டும் பட்டணத்திலும், கிராமத்திலும் பிடித்திருக்கும் மார்க்க முரண்பாடுகளை விட்டும் சலாமத்தாக்கியருள் புரிவாயாக ஆமீன்

SGP ஒப்பம், இங்ஙனம்

மார்க்கத்திற்கும் இல்முக்கும் ஊழியம்புரியும்
முகம்மத்அலி மரைக்கார் பின் ஹாஜில் ஹறமைன்
அஹ்மத் மரைக்கார் வலிகம மத்றசதுல் கிலுறிய்யா
அறபிக் கல்லூரியின் பிரதம ஆசிரியர் வலிகம இலங்கை

தீர்ப்பு வாசித்து முடிந்ததும் பார்த்தபக்கமெல்லாம் தக்பீர்

ஓசை முழங்கியது. இதன் பின்
தலைவர் கேற்முதலியார் M. S. காரியப்பர் M. P.
அவர்களால சுருக்கமாக முடிவுரை கூறப்பட்டது.

இதன் பின் நத் வதுல் உலமாக்கமிட்டி அக்கிராசனர் ஆலி ஜனுப் மௌலவி M. P. மக்பூல் ஆலிம் கூட்டம் நிர்வாகிகள் சார்பில் நன்றிதெரிவித்தார்கள். அதன் பின் பாத்திஹா ஓதப் பட்டு பி. ப. 5-50க்கு கூட்டம் இனிது கலைந்தது.

இந்நினைவு மலரின் முடிவுரையாகக் கிழக்கு மாகாண உலமாக் களினதும், அரபுமத்றசாக்களின் அதிபர்கள் பேராசிரியர்களின தும் அங்கீகாரமான அரபு பத்தாவின் சாராம்சச் சுருக்கத்தைக் குறிப்பிடுகிறோம். நீண்ட காலமாகக் கல்முனையில் ஜீம்ஆவுடன் லுஹர் தொழுதுவந்ததைக் கடந்த 3 ஆண்டுக் காலமாக நிறுத்தி விட்டனர். 54 உலமாக்களின் ஆட்சேபணைக்கும் எதுவித பதிலும் தராததால் இவ்விஷயத்தின் பிக்ஹு சட்டத்தொகுப்பை மக்கள் விளங்கிக்கொள்ள, நல்ல பாதையைத்தெரிந்து கொள்ள வாய்ப் பளிக்கிறோம்.

ஜீம்ஆத்தொழுகை கோடைக்கும் மாரிக்கும் இடம் பெயராத அடிமையற்ற சுதந்திர புருடரான பிரசியப்பூர்த்தியடைந்த புத்தி பேதலியாத ஒவ்வொரு ஆடவனின்மீதும் கட்டாயக்கடமையாகும் தொழில் காரணமாய்த் தங்கியிருப்போரின் ஜும்ஆ மேற்கூறிய வர்களைத்துயர்ந்தே சிஹ்ஹத்தசகும். தொழிலுக்காகத் தங்கியிருப் போரை முகீமாகவே கொள்ளப்படும். முஸ்தவ்தின் ஆகமுடியாது இப்னு மஸ் ஊது (றலி) அவர்களைத் தொட்டும் பைஹகி இமாம் கூறிய ஆதாரத்தின்படி மேற்கூறிய இடத்தில் ஜும்ஆ நடத்து வது கடயல்ல அப்படி நடத்தினுல் லுஹர் தொழுவது ஈ மத்ஹ புச்சட்டப்படி கடமையாகும்.

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதான
## "சல்லூ காமற அய்து மூனீ உசல்லி"

என்ற ஹதீஸ் மேற்கூறிய பைஹகீ இமாமுடைய ஹதீஸை உறுதிப்படுத்துகிறது.

இவ்வாறுதான் ஷர்வானி நிஹாயா முஃனீ ஆகிய பிக்ஹு சட்டக்கிரந்தங்களில் வருகிறது நீங்கள் விரும்பினுல் பார்த்துக் கொள்ளுங்கள்.

அறிஞர் ஸைனுத்தீன் மத்தும் அவர்கள் தங்களின் சட்ட நூலாகிய கத்ஹுல் முஈனில் பின்வருமாறு கூறுகிருர்கள்.

குடிபதியாய் வாழும் அடிமையற்ற சுதந்திர புருடனுன பிராயப்பூர்த்தியடைந்த புத்திமாருட்டமில்லாத நிபந்தனையுடன் ஆண்கள் 40 பேர் ஒன்று சேர்வதனுல் தான் ஜும்ஆ கடமையாகும். ஆதாரநூல் இஆனுவுடன் பத்ஹுல் முஈன். மேலும் இமாமவர்கள் ஜும்ஆ சிஹ்ஹத்தாகுவதற்கு இருக்கும் ஷர்த்துடனே இன்னும் ஆறு சற்துகளையும் சேர்த்துள்ளார்கள். அதில் 2வது ஷர்து ஜும்ஆ நிறைவேறக் கூடியவர்களில் 40 பேர் இருக்கவேண்டும் என்பது இதற்கு ஆதாரம் இப்னுமஸ் ஊது (றலி) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ் ஆகும். நாயகம் (ஸல்) அவர்கள் மதீனுவிலே ஜும் ஆத் தொழுதார்கள். தொழுதவர்கள் 40 பேராயிருக்கும் நிலையில் நாயகத் திருமேனி (ஸல்) அவர்கள் மீண்டும் சொல்லியிருக்கிறுர்கள். 40 பேர்கள் ஒன்று சேர்ந்தால் அவர்கள் மீது ஜும் ஆத் தொழுவது கடமையாகும். இன்னும் கூறினுர்கள் 40 பேரைக் கொண்டேதவிர ஜும்ஆ விதியில்லையென்று.

இந்த ஹதீஸ்கட்கு மத்ஹபைப்பின் பற்றும் இமாம்கள் விளக்கம் கூறுகிறுர்கள். 40 பேர்கள் என்றுல் அவர்களைக் கொண்டு ஜும்ஆ நிறைவேறக்கூடியவர்களாகும் என்று. மின்ஹாஜின் பேரறிஞர் நவவி இமாம் கூறுகிறுர்கள். கோடைக்கும் மாரிக்கும் இடம் பெயர்ந்து செல்லாத குடி பதியான சுதந்திரபுருடர்கள். ஆகில் பாலிகான 40 பேரைக் கொண்டு ஜும்ஆ விதியாகும் என்று.

மேலும், பேரறிஞர் இமாம் ருபிஈ கூறுகிறுர்கள் ஜும்ஆத் தொழுகை நிறைவேறுவதற்கு வரையறை செய்யப்பட்ட 40 பேர்களைக் குத்பாவைக் கேட்பதிலேயும் ஷர்த்திடப்படும் என்று.

ஆதார நூல்:

## (ஹாஷியத் உமைரு)

குத்பா ஓத ஆரம்பிக்கும் நேரமே குடிபதியாகிய அந்த 40 பேரும் குத்பாவைக் கேட்டிருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் ஜும்ஆ உண்டாகாது.

இப்னுஹஜர் இமாம் தங்களின் துஹ்பாவில் கூறுகிறுர்கள். குடிபதியாய் உள்ளவர்கள் என்ற நிபந்தனை இழந்ததற்காக ஹஜ்ஜதுல் விதாஃ என்னுமிடத்தில் அறபா மைதானத்தில் நபியவர்கள் (ஸல்) ஜும்ஆ நடத்தவில்லையென்று. நபியவர்களும் கூடச் சென்ற சஹாபாக்களும் மதீனுவாசிகளாக நபியவர்கள் கணக்கிட்டார்கள். அன்றைய லுஹரையும், அசறையும் ஜம்உதக்தீமாகத் தொழுதார்கள் (ஷர்வானி).

இஸ்லாத்தின் தலைவர் அபூயஹ்யாஸ கரிய்யல் அன்சாரி தங்கள் அஸ்னல் மதாலியில் கூறுகிறுர்கள். சில காலத்திற்குப் பின்னுல் தங்கள் தாய்நாட்டுக்குச் செல்லும் நோக்கமுடையவர்களைப்

போன்றுள்ள குடிபதியில்லாதவர்களைக் கொண்டு ஜும்ஆ நிறை வேருதென்று அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளார்கள்.

உதாரணமாக தொழில், வியாபாரம் உத்தியோகம் போன்ற தேவைக்காக இங்கு தங்கியிருப்பவர்களை (வருடக்கணக்காயினும் சரியே) முஸ்தவ்தின் குடிபதியானவர்களுடன் பிக்ஹில் சேர்க்க வில்லை. மேலும் தனித்துத் தொழுவதைவிட ஜமாஅத் கூட்டத் தொழுகை 27 தறஜாக்கள் கூடியதாகும் (ஹதீஸ்) நவவீ இமாம் ஜமாஅத் தொழுகை பர்லுகிபாயாவென்று கூறுகிறார்கள். ஜமா அத் பர்லுஐனு என்று ஹம்பலீ மத்ஹபில் கூறப்படுகிறது.

எனவே, ஜும்ஆத் தொழுகை கூட்டத் தொழுகையாகும். அதன் ஷர்த்துகளைப்பேணி நடந்தால் 27 தறஜாக்களைப் பெறு வோம். சலபுஸ்ஸாலிஹீன்களான முன்னோர்கள் ஒரு ஜமா அத் தப்பிப்போனால் தெண்டகுத்தம் (கப்பாறு) கொடுப்பவர்களாக இருந் திருக்கிறார்கள். ஆதாரம் இஹ்யா இமாம் கஸ்ஸாலி ஜுஆக் கூடும் ஷர்துகளை இழந்த இடமான கல்முனைக் கடைத்தெருப் பள்ளியில் முஸ்தௌதின் 40 அல்லது அதற்குக் குறைந்த அளவோ தானும் இதுவரையிலில்லை. இங்கிருந்து சுமார் ½ மைல் தூர முள்ள கல்முனைக்குடி அல்லது மருதமுனை போன்ற இடங்களில் கடைத் தெருவிலுள்ள முகீம்கள் தொழிலுக்காகத் தங்கியிருப் போர் தங்கள் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றலாம். அல் லது ஜும்ஆவுடன் லுஹிர்த்தொழுகையை நடத்தி வருவது முக் கியமாகும். முன்பெல்லாம் அப்படியே நடந்துவந்ததை யாரும் மறுப்பதற்கில்லை.

கிழக்கிலங்கை உலமாசபை என்ற பெயருடன் 4—10—66ல் பதிவாகி 6—12—66 தினகரன் வாயிலாக எம்சபைத்திட்டங்களைச் சுருக்கி விளக்கினோம்.

இலங்கை முஸ்லிம்களை ஷரீஅத் அடிப்படையில் எம் சபைத் திட்டத்தை அமைத்து ஈமான் இஸ்லாம் இபாதாத் முறைகளில் அங்கீகரிக்கப்பட்ட மத்ஹபுகளைப் பின் பற்றி நடக்க உதவுவதே எம் குறிக்கோள். உத்உஇலாசபீலீ றப்பிக ... என்னும் வேத வசனத்தை அடிப்படையாகவும் மூலதனமாகக் கொண்டு நல்ல பாதையில் அழைத்து நலவைக் கொண்டேவித் தீயதைவிலக்கும் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதும், எமக்கு உதவியாய் நல்ல உலமாக்களை - சுன்னத் ஜமா அத் கொள்கையும், நல்வணக்கமுள்ள அறிவாளர்களைச் சேர்த்துப் பல பாகங்களிலும் மிஷனரிகளை ஏற் படுத்திச் சன்மார்க்க ஊழியம் புரிவதே எம் சபையின் இலட் சியமாகும்.

இப்பிரசுரத்தை அச்சிட்டு வினியோகிக்கத்தக்க தெம்பையும் பலத்தையும் அளித்த மறைபொருளாம் மாலிகுல் முலூக்கான எல்லாம் வல்ல றஹ்மானுக்கு என் இதயமுருகும் நன்றியைச் சமர்ப்பித்து மகிழ்கிறேன். அல்ஹம்து லில்லாஹ் ''வலகஷ்ஷுக்று''

அச்சியற்றத்தக்க பொருளுதவி புரிந்தவர்கட்கும் எம் நன்றி உரித்தாகட்டும்.

இப்பிரசுரம் தேவையானோர் இவர்களிடமே அச்சுச்செலவை யீந்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

இவ்வண்ணம்

காதிமுல் இஸ்லாம்

இப்றுஹீம் பின் யூசுப்.

பிரசுரக்காரியதரிசி

கல்முனை-5.

7-12-66.

எம் சபையின் வேலைத்திட்டங்கள் ஷரீஅத் அடிப்படையில் அமைந்துள்ளதால் இச்சபையின் கௌரவ அங்கத்தவர்கள் உலமாக்களாகவே இருப்பார்கள். பல அன்பர்களின் கேள்விகளுக்கிணங்கச் சாதாரண அங்கத்தவர்களையும் சேர்க்கிறோம். இருபாலார்கட்கும் இடமுண்டு. சாதாரண அங்கத்தவர்களாய்ச் சேர விரும்புவோர் பின்வரும் மாதிரி விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பினால் முழு விபரமும் அறிவிப்போம்.

இன்ஷா அல்லாஹு

விண்ணப்பப்பத்திரம் அனுப்ப வேண்டிய விலாசம்:

Y. M. இப்றுஹீம்
பிரசாரக் காரியதரிசி
5ம், வார்ட், கல்முனை.